# விபஸ்ஸனா செய்தி மடல்

மலர்-3, இதழ்-2, நவம்பர் - 2009 | ஒரு மடலின் விலை-ரூ 2.50 | விபஸ்ஸனா தியான மையம்
தமிழ் மாதப் பத்திரிகை | ஆண்டு சந்தா-ரூ 30 | தம்ம சேது, சென்னை, தமிழ்நாடு

**[விபஸ்ஸனா: ஸயாஜி ஊபாகின் வழிமரபில், திரு சத்திய நாராயண கோயங்கா அவர்களால் போதிக்கப்படும் தியான முறை]**

## தம்ம வாக்கு

**அக்கொச்சி மங் அவதி மங், அஜினி மங் அஹாஸி மே;**
**யே தங் உபநய்ஹந்தி, வேரங் தேஸங் ந ஸம்மதி.**

**அவன் என்னை கடுமையாக பேசினான், என்னை அடித்தான், என்னை தோற்கடித்தான், என்னிடமிருந்து எல்லாவற்றையும் எடுத்துக் கொண்டான் என்பன போன்ற சிந்தனைகளுக்கு அடைக்களம் தரும் ஒருவரிடம் வெறுப்பு தனிவதில்லை.**

தம்மபதம் - 1-3

# கிஸா கோதமீ

**திரு. சத்ய நாரராயண கோயங்கா**

ஸ்ராவஸ்தி நகரத்தின் மிகவும் ஏழ்மையான குடும்பத்தில் பிறந்தவர் தான் கோதமீ என்ற இளம் பெண். மிகவும் நலிவுற்ற, மெலிந்த உடல் அமைப்பை கொண்ட காரணத்தால் கிஸா (மெலிந்த) கோதமீ என்று அழைக்கப்பட்டார். தற்செயலாக அங்குள்ள ஒரு செல்வந்தகர் குடும்பத்தில் அவளுக்கு திருமனமானது. ஆயினும், பணக்கார குடும்பத்தின் எந்தவித சுகமும் அவளுக்கு கிடைக்கவில்லை. ஏழை குடும்பத்திலிருந்து வந்த காரணத்தினால் கிண்டலான குத்தல் பேச்சிற்கு ஆளானார். குடும்பத்தில் அவமானப்பட்டு கொண்டேயிருந்தாள். குழந்தை இல்லாத காரணத்தினாலும் அவள் பெரும் இகழ்ச்சியை சந்திக்க வேண்டியிருந்தது.

சில வருடங்கள் கழிந்ததும் அவளது நிலை மாறியது. அவள் கருவுற்று ஒரு ஆண் குழந்தையைப் பெற்றெடுத்தாள். குழந்தை பெற்றதனால் அவமானமும், வசைச்சொல்லும் நின்றது. மரியாதையும் கௌரவமும் கிடைத்தது. இருப்பினும் இந்த மகிழ்ச்சியும் கூட அதிக நாட்கள் நீடிக்கவில்லை. இரண்டு மூன்று ஆண்டுகள் கழிந்ததும் பிள்ளை இறந்துபோனான். பிள்ளையின் மரணம் கிஸாவுக்கு பொருக்க முடியாததாகிவிட்டது. இறந்த மகனை இடுகாட்டிற்கு எடுத்துச் செல்ல மக்கள் வந்தபோது, கிஸா அந்த இறந்த மகனின் பினத்தை மார்போடு அனைத்துக்கொண்டாள். ஏதாவது ஒரு சிறந்த மருத்துவரை கூப்பிட்டு இவனை பிழைக்க வையுங்கள் என்று அவள் அழுதுகொண்டே மக்களிடம் வேண்டிக்கொண்டாள். அவளது இந்த பைத்தியக்கார நிலையை கண்டு மக்கள் துக்கமடைந்தனர். ஆனால், என்ன செய்வது? இறந்தவரை உயிர்பிக்க எந்தவொரு மருந்தும் இருப்பதில்லை. உடைந்தனவற்றுக்கு எந்தவொரு மருந்தும் இருப்பதில்லை. இறுதியில் ஒரு கருணை நிறைந்தவர், “பகவான் புத்தர் ஒரு மேன்மையான மருத்துவர், நோயை குணப்படுத்துவதில் வல்லவர்” என்று ஆலோசனை வழங்கினார். இப்போது அவர் ஜேதவனத்தில் வசித்து வருகிறார். அவரிடம் செல், அவர் ஏதாவது மருந்தை கொடுக்கலாம்.” என்று கூறினார்

அவள் குழந்தையை மார்ப்பில் அனைத்தபடி வெகுவேகமாக ஜேதவன விஹாரத்தை வந்தடைந்தார். பகவான் தம்ம இருக்கையில் அமர்ந்தபடியே ஸாதகர்களுக்கு தம்ம போதனை வழங்கிக் கொண்டிருந்தார். அவள் அழுது கொண்டும் கதரிக்கொண்டும் அவர் அருகில் வந்து, குழந்தையின் பினத்தை அவர் காலடியில் வைத்து, “வணக்கத்திற்குரிய பகவானே! இந்த குழந்தைக்கு வாழ்வளியுங்கள். இவனே எனது ஆதரவு” என்று வேண்டி கேட்டாள்.

“நகருக்குச் சென்று எந்த வீட்டிலிருந்தாவது ஒரு கைப்பிடி கடுகை வாங்கி வா” என்று பகவான் கூறினார்.

கிஸா கோதமீ மகிழ்ச்சியடைந்தாள். பகவான், என் குழந்தையை உயிர்பித்து விடுவார். விரைவில், கடுகு தானியங்களை வாங்கிவர அவள் கிளம்பினாள். பகவான் அவளை நிறுத்தி, “பார், எந்த வீட்டில் எவரொருவரும் இதுவரை இறக்கவில்லையோ, அந்த வீட்டிலிருந்தே கொண்டு வா” என்று கூறினார்.

”ஆம், பகவானே, அப்படிப்பட்ட வீட்டிலிருந்தே கொண்டு வருகிறேன்.”

நகரத்தின் பல பகுதிகளில், சந்து சந்தாக, வீடு வீடாக கடுகை கேட்டாள். மக்களும் மகிழ்ச்சியுடன் அதனை கொடுப்பதற்காக தயாராகவும் இருந்தனர். ஆனால், ‘உங்கள் வீட்டில் எவரும் இதுவரை இறக்கவில்லை அல்லவா?’ என்று கேட்டபோது, வீட்டின் உறுப்பினர்கள் வாயடைத்து போனார்கள். எவரும் இதுவரையில் இறக்காதவாறு ஒரு வீடு கூட கிடைக்கவில்லை.

மாலைப் பொழுது வர வர அவள் சோர்வடைந்து நொருங்கிப்போனாள். இறப்பென்பது உயிரினங்களின் தர்மம், இயல்பு என்ற விழிப்புணர்வு அவளுக்கு அப்போது உதித்தது. இதிலிருந்து எவரும் தப்ப முடியாது. இந்த உண்மையினை உணரவைப்பதற்காகவே பகவான் புத்தர் எனக்கு இந்த வேலையை கொடுத்தார். இவ்வாறு சுயநினைவு வந்தவுடன் குழந்தையின் பிணத்தை இடுகாட்டில் ஒப்படைத்த பின்னர் பகவானிடம் திரும்ப வந்தாள்.

இப்போது அவளது மனதின் கிளர்ச்சி அகன்றுவிட்டதை அறிந்த பகவான் புத்தர் அவளுக்கு தம்ம போதனையை அருளினார். முற்பிறப்புகளின் புண்ணியங்கள் (பாரமிதாக்கள்) மிகுதியாக இருந்த காரணத்தினால், விபஸ்ஸனா செய்து கொண்டிருக்கும் போதே அவள் ஸோதாபன்னர் ஆனார். பிக்குணி ஸங்கத்தில் துறவறத்தை ஏற்று விபஸ்ஸனாவை மும்முரமாக பயிற்சி செய்துகொண்டு, அவர் சகதாகாமீ, அனாகாமீ மற்றும் முடிவில் அரஹந்த நிலையையும் அடைந்தார்.

அவர் பல துன்புறும் பெண்களுக்கு விபஸ்ஸனா தம்மத்தை கற்பித்து அவர்களை துக்கத்திலிருந்து விடுவித்தார். பகவான் அவருக்கு 'எளிமையான உடை(அங்கி)' அனிபவர்களின் வரிசையில் முதன்மையானவர் என்ற சான்றிதழை சூட்டினார்.

# சித்து விளையாட்டுகளை தடைசெய்தல்

அச்சமயம் இராஜகிரியின் ஒரு செல்வந்தகருக்கு விலை உயர்ந்த சந்தன மரத்தின் ஒரு பெரும் துண்டு கிடைத்தது. அப்போது அவர் மனதில் - "நான் ஏன் இதை வைத்துக்கொண்டு ஒரு பாத்திரம் செய்து அதை ஒரு தகுதியான மனிதருக்கு நன்கொடையாக வழங்கக்கூடாது" என்ற எண்ணம் உதித்தது.

அப்போது அவர் அந்த சந்தன கட்டையினால் ஒரு பாத்திரம் செய்து, அதனை ஒரு கூடையில் வைத்தார். பிறகு அதை ஒரு மூங்கில் கொம்பின் முனையில் கட்டி நிறுத்தினார். அந்த கூடையை இன்னும் உயர்த்துவதற்காக அவர் அந்த மூங்கில் கொம்பின் மற்றொரு முனையில் பல மூங்கில் கொம்புகளை ஒன்றன்மேல் ஒன்றாக அடுக்கி கட்டினார். பிறகு, "அரஹந்தரான, அற்புத சக்திகள் கொண்ட எந்தவொரு சமணரோ அல்லது பிராமணரோ, தானமாக அளிக்கப்பட்ட இந்த சந்தன பாத்திரத்தை மேலிருந்து எடுத்துக்கொள்ளலாம், இது அவருக்குரியதே!" என்று அறிவித்தார்.

இராஜகிரியின் அந்நாளின் புகழ் பெற்று விளங்கிய பல குருமார்களும் அங்கு வந்து, ஒவ்வொருவரும், "இல்லறத்தானே! நான் ஒரு அரஹந்த், அற்புத சக்திகளையும் கொண்டுள்ளேன். எனக்கு அந்த பாத்திரத்தை கொடுங்கள்." என்று அந்த செல்வந்தகரிடம் கூறினர்.

"வணக்கத்திற்குரியவரே! நீங்கள் அரஹந்தராகவும் அற்புத சக்திகளை கொண்டவராகவும் இருப்பின், தானமாக அளிக்கப்பட்ட இந்த பாத்திரத்தை நீங்களே கழற்றிக்கொண்டு எடுத்துச் செல்வீர்களாக" என்று அந்த செல்வந்தர் கூற கேட்டதும், அனைவரும் வாயடைத்து போய் சென்றனர்.

அச்சமயம், வணக்கத்திற்குரிய மொக்கல்லானரும், வணக்கத்திற்குரிய பிண்டோள பாரதவாஜரும் அதிகாலையில் கையில் பிக்ஷை பாத்திரத்தை ஏந்திக்கொண்டு, பிக்ஷைக்காக இராஜகிரியை நுழைந்தனர். அப்போது, பிண்டோள பாரதவாசர் மொக்கல்லானரிடம் - "மதிப்பிற்குரிய மகாமொக்கல்லானரே! தாங்கள் அரஹந்தர் ஆயிற்றே! மேலும் அற்புத சக்திகளையும் உடையவராயிற்றே! தாங்கள் இந்த பாத்திரத்தை எடுத்து வாருங்கள். உங்களுக்காகவே இந்த பாத்திரம் உள்ளது" என்று கூறினார். ஆனால், மொக்கல்லானர் இந்த ஆலோசனையை ஏற்கவில்லை.

"நானும் அரஹந்தர் தான். எனக்கும் அற்புத சக்திகள் உள்ளது. நான் ஏன் இந்த பாத்திரத்தை எடுத்து வரக்கூடாது" என்று பிண்டோள பாரத்வாஜர் எண்ணினார். அவ்வாறே முடிவு செய்த பிறகு, பிண்டோள பாரத்வாஜர் ஆகாயத்தில் பரந்து சென்று, அந்த பாத்திரத்தை எடுத்துக்கொண்டு, மூன்று முறை வானில் இராஜகிரியைச் சுற்றிவந்து மக்களுக்கு தன் அற்புத சக்தியைக் காண்பித்தார்.

அதன் பிறகு, பிண்டோள பாரத்வாஜர் பாத்திரத்துடன் தன் இருப்பிடத்திற்குச் சென்றார். பலர் அவரைப் புகழ்ந்து கொண்டு அவரை பிந்தொடர்ந்து வந்தனர்.

அந்த கூச்சலைக் கேட்டதும், பகவான் புத்தர், ஆனந்தரிடம் - "ஆனந்தா! இது என்ன கூச்சலும் குழப்பமும்?" என்று கேட்டார்.

"மதிப்பிற்குரிய பகவானே! பிண்டோள பாரத்வாஜர் இராஜகிரியின் செல்வந்தரின் பாத்திரத்தை உயரத்திலிருந்து எடுத்து வந்துள்ளார். இதன் காரணமாகவே அவரது புகழ் ஆரவாரத்தில் ஈடுபட்டுக் கொண்டு பலர் அவரை பின் தொடர்ந்து வருகின்றனர். பகவானே, இதன் காரணமாகத்தான் இந்த கூச்சல் எழுந்துள்ளது" என்று ஆனந்தர் பதிலளித்தார்.

அப்போது பகவான் இந்த நிகழ்ச்சியை கருத்தில் கொண்டு, பிக்ஷு-சங்கத்தை கூட்டினார். பிண்டோள பாரத்வாஜரை கண்டித்தபடி பகவான், "பாரத்வாஜரே! நடந்தது முறையானதல்ல, துறவிகளின் ஒழுக்க நெறிகளுக்கு விரோதமானது, தகுதியற்றது, செய்யத்தகாதது. பாரத்வாஜரே! உயிரற்ற இந்த மரத் துண்டுக்காக எவ்வாறு உங்களால் இல்லறத்தோர்க்கு அற்புத சக்தியை வெளிப்படுத்த முடிந்தது? பாரத்வாஜரே! இந்த செயல் நம்பிக்கை அற்றவர்களுக்கு நம்பிக்கை ஊட்டுவனவாகவும் இருக்கவில்லை, நம்பிக்கையுள்ளவர்களை மேலும் நம்பிக்கையை வளர்ப்பதற்கும் உதவவில்லை." என்று இவ்வாறு கூறினார்.

இவ்வாறு பாரத்வாஜரை கண்டித்தபடி பகவான் பிக்ஷுகளிடம் - "பிக்ஷுகளே! இல்லறத்தார்களுக்கு அற்புத சக்திகளை வெளிப்படுத்தக்கூடாது. அவ்வாறு செய்பவர்கள் மீது தீய செயலுக்கான கலங்கம் (துக்கட) இருக்கும்." என்று கூறினார்.

மேலும், "பிக்ஷுகளே! இந்த பாத்திரத்தை உடைத்து துண்டுதுண்டாக்குங்கள். பிக்ஷுகளுக்கு எழுதும் மை அரைப்பதற்கு கொடுத்து விடுங்கள்." என்றும் கூறினார்.

பகவான் புத்தர் சரியாகவே தடைவிதித்தார். எந்தவொரு தம்ம ஆசிரியரின் மூலம் செய்யப்படும் அற்புத சக்திகளின் வெளிப்பாடும் மிகவும் ஆபத்தானதாக இருக்கும். இதன் மூலம், பொறுப்பற்ற பழியஞ்சாமை கொண்ட ஒருவர் சாமான்ய மக்களை ஏமாற்றி அவர்களை சுரண்டிப் பிழைக்கலாம். தம்மத்திற்கு கெடு பெயர் உண்டாக்கலாம். தனது பொய்யான பெருமையை நிலைநாட்டி அதன் மூலம் தன் ஆணவத்தை பெருக்கி தங்கள் வீழ்ச்சிக்கு வழிவகுக்கிறார்கள்.

## கேள்வி பதில்

1. நமது நோக்கமும் செயலும் சீராக இருக்க வேண்டும். அதாவது, நம் நோக்கம் சரியாக இருக்கிறது, ஆனால் அதன் செயல் தீங்கு விளைவிக்கக் கூடியதாகவோ அல்லது கவனமற்றதாகவோ இருந்தால், நம் நோக்கத்தில் ஏதோ குறையுள்ளது என்றல்லவா பொருள்?
உங்கள் பஞ்ஞா அதாவது ஞானத்தை நீங்கள் வளர்க்கும் போது, உங்கள் நோக்கம் மேலோட்டமாக இருப்பதில்லை. சில நேரங்களில் நோக்கங்கள் மேலோட்டத்தில் நன்றாக இருக்கும், ஆனால், ஆழத்தில் நிச்சயமாக விருப்பு, ஆசை இருக்கும். ஆதலால், உங்கள் செயல் தவறாக போய்விடும். உங்கள் மனம் முழுவதும் பஞ்ஞாவினால் தூய்மையடையும் போது, மற்றவர்களுக்கு தீங்கு பயக்கும் எந்தவொரு செயலையும் நீங்கள் செய்ய மாட்டீர்கள். சில நேரங்களில் அது பாதிப்பதாக தெரியலாம், ஆனால் ஆழத்தில் அது உதவிகரமாகத் தான் இருக்கும். ஏனெனில் அஸ்திவாரம் நல்லதாக உள்ளது. ஆகையால், மனதின் அஸ்திவாரத்தை எப்படி ஆழ்நிலையில் தூய்மையாக வைத்துக்கொள்வது என்பது தான் மிக முக்கியமானது.

2. நாம் ஏன் ஆனாபானா பயிற்சி செய்கிறோம்?
ஆனாபானா உங்கள் மனதை வலிமையானதாகவும் கூர்மையானதாவும் ஆக்கும். உங்கள் விபஸ்ஸனா பயிற்சியை நன்றாக செய்ய ஆனாபானா பெரிதும் உதவும். நமது மன மாசுக்களிடம் சண்டையிடும் போது ஆனாபானா ஒரு நல்ல ஆயுதமாக இருக்கும். ஆனால், வெறும் ஆனாபானா மட்டும் மாசுக்கள் அனைத்தையும் அழிக்காது. விபஸ்ஸனா மிக முக்கியமானது.

3. இந்த பயிற்சியின் மூலம் இதே பிறவியில் ஒருவர் விடுதலை அடைந்து விட முடியுமா?
ஆம், ஆம். இந்த பயிற்சி மிக ஆழத்தில் வேலை செய்வதால், நீங்கள் சேர்த்து வைத்துள்ள அனைத்தையும் இது நீக்கிவிடும். அப்போது தான் நீங்கள் முழுமையாக விடுதலை அடைவீர்கள்.

4. ஒரு ஈமச் சடங்கிற்கு செல்லும் போது நாம் அழுகையே இல்லாமல் சந்தோஷமாக செல்ல வேண்டுமா?
நீங்கள் மிகுதியாக அழுவீர்களானால், அழுகையின் ஸங்காரங்களை நீங்கள் மிகுதியாக தோற்றுவிக்கிறீர்கள். அது எப்படி உதவும்? உங்கள் அழுகை இறந்தவருக்கு எவ்விதத்திலும் உதவுவதில்லை. ஆகையால் சமநிலையுடன் இருந்து, மற்றவர்களுக்கு உதவ முயலுங்கள். துயரத்தில் இருப்போர்களுக்கு ஆறுதல் கூறி அவர்களுக்கு சிறிது வலிமை அளியுங்கள். நீங்களும் அழத் தொடங்குவீர்களானால், துயரத்தில் இருக்கும் மற்றவர்களுக்கும் நீங்கள் மேலும் சோர்வை தருகிறீர்கள். நீங்கள் உங்களுக்கும் தீங்கு விளைவித்துக் கொண்டு மற்றவர்களுக்கும் தீங்களித்து சுற்றுப் புறத்தையும் பாதிக்கிறீர்கள். அழுகை எவ்விதத்திலும் உதவாது.

## பாலி மொழி வகுப்பு – 14

பாரமிதைகள் - மனப் பண்புகள்
நேக்கம்ம - துறவு, ஸீல - ஒழுக்கம், விரிய - முயற்சி, கந்தி - பொறுமை, ஸச்ச - உண்மை, வாய்மை, அதிட்டான - உறுதியான தீர்மானம், பஞ்ஞ - தெள்ளறிவு, ஞானம், உபேக்கா - உள்ளச் சமநிலை, மெத்தா - பேரன்பு, தான - நன்கொடை, தானம்

**RNI TC NO: TNTAM 17399 / 26.03.07 RDIS NO: 126/07**
**REGISTRAR OF NEWSPAPERS FOR INDIA No. TNTAM/2007/22647 POSTAL REG NO: TN/CH©/140/08-10**

## விபஸ்ஸனா தியான முகாம் கால அட்டவனை - 2009

| | 10-நாள் | 3-நாள் | குழந்தைகள் முகாம் |
|---|---|---|---|
| **நவம்பர்** | 18-29 | - | - |
| **டிசம்பர்** | 2-13, 16-27 | - | 27-28 |

## விபஸ்ஸனா தியான முகாம் கால அட்டவனை - 2010

விபஸ்ஸனா தியான மையம், தம்ம சேது, 533, பழந்தண்டலம் ரோடு, வழி: திருநீர்மலை, திருமுடிவாக்கம்-அஞ்சல், சென்னை - 600044, தொலைபேசி: 044-24780953, 24780952

| மாதம் | 10-நாள் | ஸதிபட்டான | சிறப்பு பத்து நாள் | 20-நாள் | 30-நாள் | 3-நாள் | குழந்தைகள் முகாம் | தம்ம சேவகர்களுக்கான பயிற்சி வகுப்பு |
|---|---|---|---|---|---|---|---|---|
| **ஜனவரி** | **2-13 20-31** | | | | | **14-17** | **31st** | |
| **பிப்ரவரி** | **18-1(Mar)** | **6-14** | | | | **3-6** | | **14th** |
| **மார்ச்** | | | **25-5(Apr)** | **5-26** | **5-5(Apr)** | | | |
| **ஏப்ரல்** | **8-19 22-3(May)** | | | | | **8-11** | | |
| **மே** | **19-30** | | | | | **6-9** | **10th 15-16 30th** | **9th** |
| **ஜூன்** | **3-14** | **19-27** | | | | **3-6 16-19** | | |
| **ஜூலை** | **1-12 21-1(Aug)** | | | | | **1-4 15-18** | **18th** | |
| **ஆகஸ்ட்** | **5-16 19-30** | | | | | **5-8 19-22** | **1st** | **15th** |
| **செப்டம்பர்** | **2-13 30-11(Oct)** | **18-26** | | | | **2-5** | **26th** | |
| **அக்டோபர்** | **14-25** | | | **31-21(Nov)** | **31-1(Dec)** | **14-17** | | |
| **நவம்பர்** | | | **20-1(Dec)** | | | | | |
| **டிசம்பர்** | **2-13 16-27** | | | | | **2-5** | **30-31** | **13th** |

**சந்தா-காலம் நிறைவு பெற்றவர்களுக்கு ஓர் வேண்டுகோள்:** தங்களது சந்தா காலத்தை மேலும் ஒரு வருடத்திற்கு நீட்டிக்க விரும்புபவர்கள், தங்கள் ஆண்டுச் சந்தாவை கீழே குறிப்பிட்டுள்ள விலாசத்தில் பணவிடை(MO) மூலமாக செலுத்தலாம். **முகவரி:** விபஸ்ஸனா செய்தி மடல், c/o: திரு. வீ. சந்தானகோபாலன், T2, அக்ஷயா ஃபளாட்ஸ், 55 - இருசப்ப தெரு, திருவல்லிகேனி, சென்னை - 600005

Published by V. Santhanagopalan on behalf of Vipassana Meditation Centre, from Flat No. T2, Akshaya Flats, 55 Irusappa Street, Triplicane, Chennai 600005 and printed by R. N. Yogi at Leeyo Graphiks, New No. 6, Gaffur Street, Royapettah, Chennai 600014. Editor: V. Santhanagopalan

REGISTERED NEWSPAPER

Posted on: 13/11/2009
POSTED AT EGMORE
RMS/1 (PATRIKA CHANNEL)

ÜÂð¢¹ïó¢: Vipassana Meditation Centre
T2, Akshaya Flats, 55 Irusappa Street, Triplicane, Chennai 600005 ☏: 044-24780953, 24780952
e-mail: info@setu.dhamma.org,
Website: www.vridhamma.org, www.setu.dhamma.org, www.tamil.dhamma.org